**PROCEEDINGS OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF THIRU.V.SEKAR ROUGH STONE QUARRY, LEASE OVER AN EXTENT OF 2.30.0 HA LOCATED AT SF.NO. 270 (PART – 1), VENKATESAPURAM VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 18.10.2023 AT 11.00 AM AT M/S. P.V.R – L.M.R KALYANA MANTAPAM, NO. 344/1, 344/2, BERIKAI VILLAGE, THEERTHAM ROAD, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT - 635105.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru. C. Suresh | : | Special District Revenue Officer,<br>(LA – 948 A STRR),<br>National Highways, Hosur.<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. R. Venkatesan., M.E., | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District. |
| 3 | Er. T. Senthil Kumar | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District. |
| 4 | Thiru.V.Sekar | : | The Proponent<br>Thiru. V. Sekar Rough Stone Quarry |
| 5 | Thiru.P.Gopinath | : | EIA Consultant,<br>M/s. GEO Exploration and Mining Solutions,<br>Salem |
| | Public | : | 54 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Special District Revenue Officer, National Highways, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed project of rough stone quarry of Thiru.V.Sekar Rough Stone Quarry, Lease over an Extent of 2.30.0 Ha Located at SF.No. 270 (Part – 1), Venkatesapuram Village, Shoolagiri Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as "Dinathanthi" and "The Hindu" dated 14.09.2023 and bit notices regarding public hearing was issued to the public of Venkatesapuram Village, Beggili Village, Gollaepalli Village and Enakapranapalli Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

Special District Revenue Officer, National Highways, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Special District Revenue Officer, National Highways, Hosur has requested the project proponent to explain about their proposed Rough Stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.P.Gopinath, EIA Consultant, M/s. GEO Exploration and Mining Solutions, Salem of the proposed Rough Stone quarry project has made presentation about the proposed rough stone quarry project to the public along with

Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Rough Stone quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Navin Kumar, Venkatesapuram Village:**

Thiru. Navin Kumar has said that, we have no objection in this proposed project. He also said that the safety of the workers working in the quarry should be ensured. He said that the quarry management should help the local school. It should be ensured that quarry trucks do not operate at high speed and covering the truck with tarpaulin while carry the gravel without scattering on roads. Further, he said that, during the quarry operation, the quarry should be operated in such a way that dust does not emanate by taking necessary air pollution control measures. He asked the farmers to be compensated for any damage caused by the operation of the quarry.

**2. Thiru. Nagaraj, Venkatesapuram Village:**

Thiru. Nagaraj has said that, we have no problem in this proposed project. Around the quarry, saplings should be planted and maintained to control dust. Further, he said that the dust should be controlled by sprinkling water on both sides of the road with sprinklers. He asked the farmers to be compensated for any damage caused by the operation of the quarry.

**3. Thiru. Srinivas, Venkatesapuram Village:**

Thiru. Srinivas has requested that, quarry's trucks should not be operated during school opening and closing hours (i.e. 7 am to 9 am and 4 pm to 5 pm).

**4. Thiru. Murali Mohan, Venkatesapuram Village:**

Thiru. Murali Mohan has said that, we have no problem in this proposed project. He asked the farmers to be compensated for any damage caused by the operation of the quarry.

5. **Thiru. Manjunath, NGO, Hosur :**

Thiru. Manjunath has said that, we have no problem in this proposed project. Further, he said that, medical camps should be conducted by the quarry management once a month and medical check-ups should be done for the local people.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 9 number of petitions were received on the proposed Rough Stone quarry project during the public hearing meeting. 'The petitions are enclosed herewith'.

Further, it is informed that, one email representation was received in the O/o.District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

20/10/2023

| | | |
|---|---|---|
| **District Environmental Engineer**<br>**Tamilnadu Pollution Control Board**<br>**Hosur** | **Special District Revenue Officer**<br>**(LA – 948 A STRR)**<br>**National Highways**<br>**Hosur** | **District Collector**<br>**Krishnagiri** |

3/7 3/7

**திரு. வெ.சேகர் ரப் ஸ்டோன் குவாரி, சர்வே. எண்.270 (பகுதி–1), வெங்கடேசபுரம் கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 2.30.0 ஹெக்டர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 18.10.2023 அன்று தீர்த்தம் மெயின் ரோடு, அரசு உயர்நிலைப் பள்ளி அருகில், மாருதி நகர், பேரிகை, சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். பிவிஆர் & எல்எம்ஆர் கல்யாண மண்டபம், முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. C. சுரேஷ் | : | தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு – 948A STRR) தேசிய நெடுஞ்சாலை, ஓசூர். (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. R. வெங்கடேசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 3 | Er.T.செந்தில் குமார் | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 4 | திரு.V.சேகர் | : | உரிமையாளர் திரு.V.சேகர் ரப் ஸ்டோன் குவாரி |
| 5 | திரு. P. கோபிநாத் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| | பொதுமக்கள் | : | 54 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு.V.சேகர் ரப் ஸ்டோன் குவாரிரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த தனி மாவட்ட வருவாய் அலுவலர், (நில எடுப்பு – 948A STRR), தேசிய நெடுஞ்சாலை, ஓசூர் அவர்கள், பொதுமக்கள் மற்றும் திரு.V.சேகர் ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 14.09.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், வெங்கடேசபுரம், பெக்கிலி, கொல்லப்பள்ளி, இனக்கபிரனப்பள்ளி ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

தனி மாவட்ட வருவாய் அலுவலர், (நில எடுப்பு – 948A STRR), தேசிய நெடுஞ்சாலை, ஓசூர். அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் திரு.V.சேகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திரு.V.சேகர் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. P. கோபிநாத், தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. நவீன் குமார், வெங்கடேசபுரம் கிராமம்:**

திரு. நவீன் குமார், அவர்கள், இக்குவாரி அமைவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார். மேலும், குவாரியில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட வேண்டும் என்று கூறினார்.

உள்ளூரில் அமைந்துள்ள பள்ளிக்கு குவாரி நிர்வாகத்தினர் உதவிட வேண்டும் என்று கூறினார். குவாரியின் கனரக வாகனங்கள் அதிவேகத்தில் செல்லாமலும் மற்றும் ஜல்லிகளை சிதறாமல் மூடி எடுத்துச் செல்வதையும் உறுதி செய்திட வேண்டும். குவாரி செயல்பாட்டின் போது, காற்று மாசு தடுப்பு உபகரணங்களை பயன்படுத்தி தூசு எழும்பாத வண்ணம் குவாரியினை இயக்க வேண்டும் என்று கூறினார். குவாரியின் செயல்பாட்டினால், விவசாயிகளுக்கு, ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**2. திரு. நாகராஜ், வெங்கடேசபுரம் கிராமம்:**

திரு. நாகராஜ் அவர்கள், இக்குவாரி வருவதில் தங்களுக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை என்று கூறினார். குவாரியை சுற்றிலும், மரக்கன்றுகளை நட்டு பராமரித்து, தூசுகளை கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறினார். நீர்த்தெளிப்பான்கள் மூலம் நீரினை சாலையின் இருபுறமும் தெளித்து தூசுகள் எழும்புவதை கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறினார். குவாரியின் செயல்பாட்டினால், விவசாயிகளுக்கு, ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**3. திரு. சீனிவாஸ், வெங்கடேசபுரம் கிராமம் :**

திரு. சீனிவாஸ் அவர்கள், குவாரியின் கனரக வாகனங்களை பள்ளி திறக்கும் மற்றும் மூடும் நேரங்களான காலை 7 மணி முதல் 9 மணி வரை மற்றும் மாலை 4 மணி முதல் 5 மணி வரை இயக்க கூடாது என்று கோரிக்கை விடுத்தார்.

**4. திரு. முரளி மோகன், புக்கசாகரம் கிராமம் :**

திரு. முரளி மோகன் அவர்கள், இக்குவாரி வருவதில் தங்களுக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை என்று கூறினார். விவசாயிகளுக்கு, ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

5. திரு. மஞ்சுநாத், NGO ஓசூர் :

திரு. மஞ்சுநாத் அவர்கள், இக்குவாரி வருவதில் தங்களுக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை என்று கூறினார். மாதம் ஒரு முறை மருத்துவ முகாம்கள் நடத்தி, உள்ளூர் மக்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

முடிவுரை:

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.V.சேகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 9 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், திரு.V.சேகர் ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து மின்னஞ்சல் மூலமாக ஒரு மனுவானது மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் மனு பெறப்பட்டது.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

20/10/2023

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**ஓசூர்**

**தனி மாவட்ட வருவாய் அலுவலர்**
**(நில எடுப்பு – 948A STRR)**
**தேசிய நெடுஞ்சாலை, ஓசூர்**

6/7

**மாவட்ட ஆட்சியர்**
**கிருஷ்ணகிரி**

6/7